DMC MUNSIF COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 151/2023 , Kunnam P.S. PW -5.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | கிருஷ்ணசாமி | Calling | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | அனுக்கூர் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 54 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.03.2026 | | | | | |

2–ம் எதிரிகள் ஆஜர். 1,3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது மருவத்தூர் காவல் நிலையத்தில் இருந்து அயல்பணியாக பெரம்பலூர் ஊரக காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 03.06.2023 ம் தேதி குன்னம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அண்ணாதுரை, த/பெ. தங்கவேல், வசிஷ்டபுரம் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வந்து அதன்தன்மைக்கேற்ப குன்னம் காவல் நிலைய குற்ற எண். 250/2023, இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 355, 506(1) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். (**உதவி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துவேல், செல்வமுருகன், என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம், பார்வை மகசர் முறையே அ.த.சா.ஆ 6 மற்றும் அ.த.சா.ஆ 7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் 2–ம் எதிரி தமிழ்செல்வன் என்பவரை 12.06.2023 ம் தேதி மாலை 15 மணிக்கு வசிஷ்டபுரம் பஸ் ஸ்டாப் அருகே காரணம் கூறி கைது செய்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மற்ற 2 எதிரிகளும் 14.06.2023 ம் தேதி நீதிமன்றத்தில் பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. மேலும், சாட்சிகள், அண்ணாதுரை, அமுதா, உலகநாதன், முத்துவேல், செல்வமுருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. மேலும் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று அதன் தன்மைக்கேற்ப இவ்வழக்கின் ஏற்கனவே இருந்த சட்டப்பிரிவுகளான 294(பி), 323, 324, 355, 506(1), இதச என்பதை 294(பி), 323, 326, 355, 506(1) என மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்தேன். (**சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது). பின்னர் இவ்வழக்கில் காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன்.

3. பின்னர் இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட அதே பிரிவுகளின் கீழ் 27.06.2023 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. அண்ணாதுரை மருத்துவமனையில் சேர்ந்தவுடன் தங்களுக்கு தகவல் வந்தது என்றால் அன்றைய தினம் இரவு தகவல் கிடைத்து மறுநாள் சென்று வாக்குமூலம் வாங்கி அதற்கு அடுத்த நாள் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். 2 நாள் காலதாமதமாக வழக்கு பதிவு செய்ததற்கான சிறப்பு காரணங்கள் எதையும் இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் ஒரு நாள் காலதாமதமாக வழக்கு பதிவு செய்தேன். காவல் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றாலும், அந்த தூரத்தை 10 நிமிடத்தில் கடந்து விடலாம் என்றாலும் சரிதான். 03.06.2023 ம் தேதி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை 12.06.2023 ம் தேதி நீதிமன்றத்திற்கு 10 நாட்கள் காலதாமதமாக அனுப்பியதற்கான சிறப்பு காரணம் எதுவும் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

2. பார்வை மகசரில் உள்ள சங்கதிகள் என்னால் எழுதப்பட்டவை என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எழுதியவர் கையெழுத்து வேறுபட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சம்பவம் சாலையில் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பார்வை மகசரில் சம்பவம் சாலையில் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்பதற்கான விளக்கம் எதையும் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அண்ணாதுரையின் வலது கை சுண்டு விரல் அருகே தாக்கியதாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அண்ணாதுரையின் நடு மண்டையில் எதிரி கட்டையால் குத்தியதாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. அண்ணாதுரையின் பின் மண்டையில் தாக்கியதாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில்

DMCOURT.IN

கொளஞ்சி, கந்தசாமி, லோகு, பூங்கோதை, கவிதா ஆகியோர் வீடுகள் உள்ளதாக பார்வை மகசரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபர்களையோ அந்த வீட்டில் வசிக்கக்கூடிய நபர்களையோ இந்த வழக்கில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வசிஷ்டபுரம் மெயின்ரோட்டிற்கும் வாதியின் வீட்டிற்கும் எத்தனை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். எதிரிகள் குடும்பத்திற்கும் புகார்தாரர் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்ததால், புகார்தாரர் வீட்டில் இருந்து வெளியே வந்தபோது மல்லாக்க விழுந்ததால் ஏற்பட்ட காயத்தினை எதிரிகள் ஏற்படுத்தினார்கள் என்று பொய்யாக கொடுத்த புகார் வா க்குமூலத்தினை அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து , சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் புகார்தாரரை ஆபாசமாக திட்டவில்லை, அடிக்கவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து நுண்கதிர் படம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMCOURT, KUNNAM